මැතිවරණ කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Election Commission

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

<u>படிவ இலக்கம் : 01</u>

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல :- 290
நிறுவனத்தின் பெயர் :- தேர்தல் ஆணைக்குழு

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்		குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலமை
01.	அரசாங்க சம்பளத்தை தயாரிக்கும் கணனி மென்பொருளுக்குரிய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச் சொற்கள் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றப்படாமை.	அரசாங்க சம்பளத்தை தயாரிக்கும் கணனி மென்பொருளுக்குரிய கடவுச்சொல் மாற்றப்பட்டு உரிய பிரகாரம் பேணிவரப்படுகின்றது.
02.	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்கப்படாமை.	தற்போது உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலப் பகுதியினுள் பதில் அளிக்கப்படுகின்றது.
03.	இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பை மேற்கொண்டு உரிய திகதியன்று குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	உரிய திகதிக்கு முன்னர் குறித்த அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
04.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிராமை	தேர்தல்கள் திணைக்களம் நிலவிய காலம் முதல் தேர்தல்களுடன் நேரடியாக முக்கியத்துவம் வாய்ந்த வாக்குச் சீட்டுக்கள் போன்ற பொருட்கள் கொண்டுசெல்லப்படுவதனால் வாகனங்களில் தேர்தல் ஆணைக்குழு அல்லது அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை. ஆனாலும் முன்புற கண்ணாடியில் (விண்ட்ஸ்கிரீன்) ஒட்டப்பட்டுள்ள லேபிளில் அரச இலச்சினை மற்றும் தேர்தல் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
05.	ஒரு வருடத்திலும் அதிக காலமாக நிலவிவரும் நிலுவை கடன் தொகை தீர்க்கப்பட்டிருக்காமை.	தற்போது ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டுவரும் அலுவலர் ஒருவரின் தீர்க்கப்படாத கடன் நிலுவை மாத்திரம் காணப்படுவதுடன் அந்த அலவலர் மாதாந்தம் தவணைத் தொகையை செலுத்தி வருகின்றார். குறித்த விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் மீதித் தொகையை அறவிட்டுக்கொள்ள முடியும். அது தவிர ஏனைய நிலுவைக் கடன் தொகைகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.
06.	தனது விடயப் பரப்பிற்கமைய நிறுவனம் பேண்தகு இலக்குகளை இனங்கண்டு கொண்டிருக்கவில்லை.	ஏற்புடைய பிரகாரம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.
07.	இனங்காணப்பட்ட பேண்தகு இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிராமை	தற்போது பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளன.
08.	இனங்காணப்பட்ட பேண்தகு இலக்குகளை	ஏற்புடைய பிரகாரம் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலாற்றுகை குறிகாட்டிகள்

	அடைந்துகொள்வதனை அளவிடுவதற்காக செயலாற்றுகை இலக்குகள் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
09.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்ட வாய்ப்புக்களின் அளவு 50% இலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை.	தற்போது குறித்த நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளது.
10.	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வுக் கருத்துரைகள் பாதகமான மட்டத்தில் நிலவுகின்றமை.	நிலையான சொத்துக்களின் ஆரம்ப இருப்புக்களில் நிலவிய மாற்றங்கய் மற்றும் உரிய பிரகாரம் கணக்கில் பதியப்படாத சில நிலையான சொத்துக்கள் காரணமாக தீமை பயக்கும் அல்லது பாதகமான மட்டத்தில் கணக்காய்வுக் கருத்துரைகள் காணப்பட்டாலும் தற்போது அந்தக் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு சிறந்த மட்டத்திலான கணக்காய்வுக் கருத்துரைகளைப் பெற்றக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
11.	2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்திக்கமைய நிறவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தெளிவான வகையில் அதன் முன்னேற்றத்தை அளவிட முடியுமான 03 செயலாற்றுகை குறிகாட்டிகள் இனங்கண்டுகொள்ளப்பட்டிருக்காமை.	தற்போது குறித்த செயலாற்றுகை குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
12.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள்/ பிழைகள் சரி செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளை அனைத்து அலுவலர்களுக்கம் வழங்கப்பட்டுள்ளன.

தலைமை கணக்கீட்டு அலுவலர்

பெயர்:- சமன் ஸ்ரீ ரத்னாயக்க
பதவி :- தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
திகதி:- 2024.03.12